1974 சனவரி 30]

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த இன்ஸ்டிட்யூட் எப்பொழுது தொடங்கப்படும்? எந்த இடத்திலே தொடங்கப்படும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஆரம்பத்தில் சொன்னதைப் போல், மத்திய அரசு அளவில் நிறுவுவதாக இருந்தால் எந்த இடத்தில் தொடங்கப்படும் என்கின்ற கவலை நமக்குத் தேவை. ஆனால், தமிழ்நாடு அரசின் சார்பாக இதை நாம் அமைக்கின்ற காரணத்தால், குறிப்பாக சென்னை இதிலே முதல் இடமாக எடுத்துக்கொள்ளப்படலாம். எப்பொழுது தொடங்கப்படும் என்பதற்கு, மூலக் கேள்விக்கு அளித்த பதிலில், விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தேன். இறுதி மதிப்பீடு முதலிய விவரங்களெல்லாம் விரைவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு தேதி அறிவிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கால அளவு, ஏனைய விவரங்கள் அனைத்தும் அரசால் இறுதியாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று சொல்லியிருக்கிறேன். அந்த விவரங்கள் வந்த பிறகுதான் அதைப்பற்றிய விளக்கங்களை நான் அளிக்க முடியும்.

Public Service Commission Bulletin.

*242 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Public Service Commission has been permitted to issue any bulletins; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம் .

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் வெளியீடு, இரு வார (fortnightly) வெளியீடாக இருக்கும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் செயலாளர், அதன் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் இருப்பார். ஆணைக்குழுவால் பணிக்கு ஆட்சேர்ப்பு குறித்த அறிவிப்புக்களும், அதனால் நடத்தப்படும் தேர்வுகள் அனைத்தின்

முடிவுகள் குறித்து வெளியிடப்படும் அறிவிப்புக்கள் அனைத்தும் பொது மக்கள் அதனிடமிருந்து நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த வெளியீடு அமையும்.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்த சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு வருகின்றவர்களின் பொது அறிவு மிகவும் குறைவாக இருக்கிறது என்ற புகார் ஒவ்வொரு அறிக்கையிலிருந்தும் தெரிகிறது. அதை நிவர்த்திக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது சர்வீஸ் கமிஷன் சார்பாக வெளியிடப்படுகிற புல்லடினைப் பொறுத்த விவகாரம். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்தியிலே யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஆண்டுக்கொரு தடவை ஒரு ரிபோர்ட் சமர்ப்பித்து அந்த ரிபோர்ட் இரண்டு சபைகளிலும் விவாதிக்கப்படுகிறது. அது மாதிரியாக இங்கும் ஏற்பாடு செய்ய வழி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்தியிலே என்ன செய்யப்படுகிறது என்பதை அறிந்து அதுபோல் நாமும் பின்பற்றலாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வேலைக்கு நபர்களைத் தெரிந்தெடுக்கும் நிறுவனமாக இருக்கிறது. அதனால் அங்கிருந்து வெளியிடக்கூடிய புல்லடின்கள் சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமல்லாமல், வேலை இல்லாமலிருக்கும் கிராமப்புற மக்களுக்கும் அந்த விவரங்களை அறிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும்பொருட்டு, கிராம நூலகங்கள் இப்படிப்பட்ட புல்லடின்களைக் கட்டாயம் வாங்கவேண்டுமென்ற ஏற்பாட்டை நம்முடைய அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கிராம நூலகங்களுக்கும் இந்த புல்லடின்கள் செல்லுகின்ற அளவுக்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. வை. பாலசுந்தரம்: இப்படிப்பட்ட சங்கடங்களைத் தவிர்ப்பதற்கு மத்திய அரசு ஸெல் ஒன்றை அமைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே போல் நம்முடைய மாநில அரசும் ஸெல் அமைத்துச் செயல்படுமா?

1974 சனவரி 30]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "இப்படிப்பட்ட சங்கடங்கள்" என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார். எப்படிப்பட்ட சங்கடங்கள் என்று சொன்னால் நான் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

கிராமப்புறங்களில் மருத்துவர்கள் பணி

* **210. வினா.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) M.B.,B.S. பட்டம் பெற்ற மருத்துவர்கள் மூன்றாண்டுகளுக்கு கிராமப்புறத்தில் பணியாற்ற வேண்டுமென்ற விதியினை அமுல்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, எம்.பி., பி.பிஸ். பட்டம் பெற்றவுடனே எல்லா டாக்டர்களும் நகர்ப்புறங்களில்தான் வேலை செய்ய விரும்புகிறார்கள். ஆகவே, நல்ல திறமையான டாக்டர்களை கிராமப்புறங்களில் பெற இயலவில்லை. ஆகவே, எம்.பி., பி.எஸ்., கோர்ஸில் சேர்த்துக்கொள்ளும் நோக்கிலேயே பட்டம் பெற்ற பிறகு கட்டாயமாக அவர்கள் கிராமப்புறங்களில் ஓராண்டு பணியாற்றவேண்டுமென்ற விதியை நம் அரசு விதிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த நிலை இல்லை. எம்.பி., பி.எஸ். தேர்ச்சி பெற்றவர்கள் எல்லோருமே தகுதியான திறமையான படிப்பு பெற்றவர்கள் என்றுதான் கருதவேண்டும். அவர்களில் பல பேர் கிராமங்களுக்கு வரத் தயாராகவே இருக்கிறார்கள். கிராமங்களில் தகுந்த முறையில் மருத்துவசாலைக்கான கட்டடம், வீட்டு வசதிகள் முழு அளவுக்கு ஏற்படச் செய்ய நிதி வசதிகள் இல்லை என்று கூறலாமே தவிர, டாக்டர்கள் வரவில்லை என்று கூற முடியாது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற டாக்டர்களுக்கு அங்கு சரியான வசதிகள் செய்து கொடுக்காத காரணத்தால் கிராமங்களில் பணியாற்ற டாக்டர்கள் செல்ல விரும்பவில்லை என்று கூறப்படுகிறதே அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.